10th March 1969]

Weavers' Grievances

* 175 J.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. Minister for Education and Industries be pleased to state—

(a) whether the weavers of Paramakudi in Ramanathapuram district picketted before the Office of the Tahsildar, Paramakudi during March–April 1968 to redress their grievances:

(b) whether they were arrested; and

(c) whether their grievances were redressed?

நெசவாளர்கள் குறைகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்ட பரமக்குடி நெசவாளர்கள் 1968 மார்ச்—எப்ரல் மாதங்களில் பரமக்குடி தாசில்தார் அலுவலகத்தின் முன் தங்கள் குறைகள் தீர மறியல் செய்தனரா?

(இ) அவர்கள் கைது செய்யப்பட்டார்களா?

(உ) அவர்களின் குறைகள் தீர்க்கப்பட்டனவா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) அவர்களின் குறைகள் பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மாநில கைத்தறி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, பரமக்குடியில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள ஜவுளி இருப்பதாகக் கூறப்படுவது உண்மையா? அப்படியானால் அந்தக் கைத்தறி சரக்கை குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு எஸ். மாதவன்: நீண்டகாலத்திற்கு முன்னால் நடைபெற்றது. அந்தக் கூட்டுறவு சங்கத்தில் எல்லாம் சரிவர நடக்காததால் கிராண்ட் கொடுப்பதும் ரிசர்வ் வங்கி கடன் கொடுப்பதும் புரடக்ஷன் பேசிசிலா, லூம் பேசிசிலா என்ற கருத்து வேறுபாட்டின் காரணமாக, இந்த நிகழ்ச்சி நடந்தது. அரசாங்கம் அதைப் பரிசீலித்து நம்மால் முடிந்ததைச் செய்திருக்கிறோம். சரக்குகள் தேக்கத்தைப் பொருத்தவரையில் எல்லா கைத்தறித் துணிகளும் எப்படி பாதிக்கப்படுகிறதோ அப்படித்தான் பாதிக்கப் பட்டிருக்கிறது. எல்லா சரக்குகளுக்கும் கடன் கொடுப்பது அவர்களுக்கும் பொருந்தும்.